குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண்.34/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 07–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.சுஜிதா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சஞ்சய் காந்தி | தொழில் | |
| தந்தை பெயர் | மாணிக்கம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.06 மணி,

Complainant Sanjay Gandhi present. Advocate Mr.Thiyagarajan present for Complainant. Accused Ramesh present. Advocate Mr.P.Kathiravan present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

4. நான் ஆஜர் எதிரி ரமேஷ் என்பவரின் மீது வழக்கு தொடர்ந்து உள்ளேன். ஆஜர் எதிரி எனது உறவினரோ அல்லது உடன் படித்தவரோ இல்லை என்றால் சரி. ஆஜர் எதிரி எனது ஊரைச் சேர்ந்தவர் அல்ல, எனது நண்பர். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருவதற்கான ஆதாரம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஆஜர் எதிரிக்கு கடன் கொடுப்பதற்கு என்ன வசதி வாய்ப்புகள் இருக்கிறது என்று இந்த நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. நான் ஆஜர் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் தேதியில் அந்த பணத்தை என் கையில் வைத்து இருந்ததற்கு ஆதாரம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்கு ஆவணங்களில் ஆஜர் எதிரி என்னிடம் கடன் கேட்டதாகவும் நான் கடன் கொடுத்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையில் இந்த வழக்கு சம்பந்தமான பரிவர்த்தனையை தவிர வேறு எந்த பரிவர்த்தனையும் இல்லை என்றால் சரிதான்.

6. எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் நான் சங்கமம் மகளிர் பண்ணோக்கு கூட்டுறவு சொசைட்டியின் கிளை செயலாளராக இருந்ததாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் அடையாள அட்டையில் இருக்கும் வழங்கியவர் கையொப்பம் என்னுடையதான்

என்றால் சரி. மேற்படி ஆவணத்தை நான் தான் வழங்கினேன் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் சங்கமம் மகளிர் பண்ணோக்கு கூட்டுறவு சொசைட்டியில் நான் தான் பொறுப்பாளராக செயல்பட்டு வந்தேன் என்றால் சரி. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் இருக்கும் புகைப்படத்தில் சதீஷ் என்பவரது சேம்பு கணக்கிற்கு வழங்கப்பட்ட கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் என்றால் சரி. **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சதீஷ் சங்கமம் மகளிர் பண்ணோக்கு கூட்டுறவு சொசைட்டியில் பணம் வசூலிப்பவராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

8. மேற்படி சதீஷ் தந்தை பெயர் ரமேஷ். ஆஜர் எதிரி ரமேஷ் தான் மேற்படி சதீஷின் தந்தை என்றால் சரிதான். நான் 12.12.2022 ல் ஆஜர் எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பை அனுப்பினேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் 12.12.2022 சட்ட அறிவிப்பு என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் 08.02.2023 ம் தேதி மீண்டும் அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. எ.ம.சா.ஆ.4, மற்றும் 5 ஆகிய ஆவணங்களில் 03.10.2022 ம் தேதி ஆஜர் எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. எனது புகார் வாக்குமூலத்திலும், பிரமாண பத்திரிக்கையிலும் ஆஜர் எதிரி என்னிடம் 09.10.2022 ம் தேதி அன்று கடன் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 மற்றும் 5 ஆகிய ஆவணங்களில் வழக்கறிஞர் அறிவிப்புகளில் நான் 03.10.2022 என்ற தேதியை 09.10.2022 ஆக திருத்தம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான்.

10. ஆஜர் எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அவர் ஓட்டுநராக வேலை செய்தார். தொழில் ஏதும் ஆஜர் எதிரி செய்யவில்லை. ஆஜர் எதிரி எந்த தொழிலும் செய்யாத நிலையில் என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் ஆஜர் எதிரி அவரது தொழில் தேவைக்களுக்காக கடன் வாங்கியதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரி. ஆஜர் எதிரி குறிப்பிட்டு எந்த காரணரத்திற்காக கடன் வாங்கினார் என்பதை எனது வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரி.

11. நான் ஆஜர் எதிரி கொடுத்த கடனுக்கு வட்டி ஏதும் கேட்டதாக எனது வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரி. ஆஜர் எதிரி கடன் வாங்கிய சமயத்தில் காசோலையை அவரே எழுதி கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் வங்கியில் காசோலையை செலுத்தியதற்கான செலுத்து சீட்டு என்றால் சரி. **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** இந்த செலுத்து சீட்டை நான் தான் கைப்பட எழுதினேன். ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.6 ஆகிய ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஒரே மாதிரியாக, ஒரே நபர் எழுதியது போல் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணத்திலும் ஒரே கையெழுத்து ஒரே மாதிரியாக இருப்பதாகவும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலம் சரியல்ல.

12. ம.சா.ஆ.1 ஆவணத்தை ஆஜர் எதிரி எழுதியிருந்தாலும் எ.ம.சா.ஆ.6 ஆவணத்தை நான் எழுதியிருந்தாலும் இரண்டு ஆவணங்களில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறு மாதிரியாக இருந்திருக்கும் என்றாலும் இரண்டு ஆவணமும் நானே எழுதியதால் தான் கையெழுத்து ஒரே மாதிரியாக இருக்கிறது என்றால் சரியல்ல. உண்மையிலேயே ஆஜர் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் இந்த வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

13. ஆஜர் எதிரியின் மகன் நான் நடத்தி வந்த வங்கியில் பணத்தை வசூலிக்கும் பணியில் இருந்து வந்ததால் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் செக்யூரிட்டிக்காக காசோலை கொடுக்க வேண்டும் என்ற நிர்பந்தத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரியிடம் இருந்து அவரது மகனுக்காக பெறப்பட்ட பூர்த்தி செய்யப்படாத காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நடத்தி வந்த வங்கி 2 வருடத்திற்கு முன்பு மூடப்பட்டுவிட்டது. நான் நடத்தி வந்த வங்கியில் பணத்தை வசூலிக்கும் பணியில் இருந்து வந்ததால் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் செக்யூரிட்டிக்காக காசோலை கொடுக்க வேண்டும் என்ற நிர்பந்தத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரியிடம் இருந்து அவரது மகனுக்காக பெறப்பட்ட பூர்த்தி செய்யப்படாத காசோலையை வங்கி மூடப்பட்ட பின்பு திருப்பி தராமல் தவறாக ஆதாயம் அடையும் நோக்கத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.42 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.